THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3(B)-Fundamentals of Law

## September 2018

All Rights Reserved

# பிரிவு 01

**விடை 01**

1.1

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு: 1.3.1** | |
| **சரியான விடை: C** | |

1.2

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 2.4.1** | |
| **சரியான விடை : A** | |

1.3

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 3.1.1** | |
| **சரியான விடை : C** | |

1.4

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 3.6.1/3.6.2/9.1.1** | |
| **சரியான விடை : D** | |

1.5

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 4.2.1** | |
| **சரியான விடை : B** | |

1.6

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 5.5.1** | |
| **சரியான விடை : B** | |

1.7

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 5.7.5** | |
| **சரியான விடை : B** | |

1.8

| | |
|---|---|
| **கற்கை வெளிப்பாடு : 7.1.1** | |
| **சரியான விடை : C** | |

NOT FOR SALE

1.9

| கற்கை வெளிப்பாடு : 7.4 |
|---|
| சரியான விடை : C |

1.10

| கற்கை வெளிப்பாடு : 8.1.1 |
|---|
| சரியான விடை : D |

**(2 x 10 = மொத்தம் 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 2

**விடை 02**

2.1

| **கற்கை வெளிப்பாடு: 1.4.2** |
|---|
| முதலீட்டுச் சபையின் (BOI) பிரதான தொழிற்பாடுகள் கீழ்வருமாறு:<br><br>• அந்நிய நேரடி முதலீடுகள் மற்றும் உள்நாட்டு முதலீடுகளை கவருதல்.<br>• விண்ணப்ப கட்டத்திலிருந்து வர்த்தக தொழிற்பாடு வரையான எல்லாக் காலகட்டத்திலும் செயன்முறையில் முதலீட்டாளர்களுக்கு உதவுதல்.<br>• முதலீட்டாளர்கள் கைத்தொழில் மற்றும் வர்த்தக தாளாண்மைகளை நிறுவுதற்கு ஏதுவாக ஏற்றுமதிச் செயன்முறைப்படுத்தல் வலயங்களை தாபித்து முகாமை செய்தல்.<br>• அந்நிய நாணயமாற்று வருமான மூலங்களை பல்துறைப்படுத்தல்.<br>• ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல். |

2.2

| **கற்கை வெளிப்பாடு : 2.1.1** |
|---|
| ஒரு வலிதான ஒப்பந்தமொன்றின் பிரதான மூலகங்கள் அல்லது அதனை ஏற்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்:<br><br>• ஒரு வலிதான கொடைமுனைவு இருத்தல் வேண்டும்.<br>• ஒரு வலிதான ஏற்பு இருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தத் தரப்பினர் சட்டரீதியாக கட்டுப்படுத்தும் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான மன எண்ணத்தை கொண்டிருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தக் கட்டுறுப்புக்கள் நிச்சயமானவையாக இருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தத்தினை செயற்படுத்துதல் சாத்தியமானதாக இருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தத் தரப்பினரிடம் கலப்படமற்ற சம்மதம் அல்லது உடன்பாடு இருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தத் தரப்பினர் ஒப்பந்தம் செய்வதற்கான இயலுமையை (capacity) கொண்டிருத்தல் வேண்டும்.<br>• ஒப்பந்தத்தின் நோக்கம் சட்டரீதியானதாக இருத்தல் வேண்டும். |

NOT FOR SALE

2.3

| கற்கை வெளிப்பாடு: 4.1.1 |
|---|
| கைமாற்றத்தகு சாதனமொன்றின் பிரதான குணவியல்புகள் கீழ்வருமாறு:<br><br>• அதன்மீதான சொத்துரிமை (title) விநியோகிப்பதன் மூலம் கைமாறப்படும். (அது கொள்ளுனர் சாதனமாக இருப்பின்).<br>• அதன்மீதான சொத்துரிமையானது விநியோகித்து புறக்குறிப்பிடுதல் மூலம் கைமாறப்படும். (அது கட்டளைச் சாதனமொன்றாக இருப்பின்).<br>• அதனை வைத்திருப்பவர் வைத்திருக்கும் காலத்தில் தமது பெயரில் வழக்குத்தொடர முடியும்.<br>• ஆதன்மீது பொறுப்புக் கொண்ட நபருக்கு ஒப்படைப்பு அறிவித்தல் தரவேண்டியதில்லை.<br>• நம்பிக்கை அடிப்படையில் கொள்ளுனர் முன்னைய கொள்ளுனரின் சொத்துரிமையில் எதுவித குறைபாடு இருந்தபோதிலும் பெறுமதி தொடர்பில் குறைபாட்டினை கொண்டிருக்க மாட்டார். |

2.4

| கற்கை வெளிப்பாடு: 7.3.4 |
|---|
| இரண்டாவது மகப்பேற்றிற்கான (உயிருள்ள பிள்ளை) பிரசவ விடுமுறை உரித்து கீழ்வரமாறு:<br>■ பிரசவத்திற்கு முன்னர் 14 நாட்கள் (அதில் பயன்படுத்தப்படாத நாட்கள் பிரசவத்திற்கு பிந்திய விடுமுறை உரித்திற்கு முன்கொண்டு செல்லப்படலாம்) அத்துடன்,<br>■ பிரசவ தினத்திற்குப் பின்னர் 70 நாட்கள்;<br>■ மொத்தம் = 84 நாட்கள்.<br>தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் யஷி பிரசவ தினத்திற்கு முன்னர் 14 நாட்கள் விடுமுறையை பயன் படுத்தாத காரணத்தினால், அதனை முன்கொண்டு செல்லலாம்.<br><br>எனவே, அவர் பிரசவ தினத்திலிருந்து 84 நாட்கள் பிரசவ விடுமுறைக்கு உரித்துடையவர் ஆவார் |

2.5

| கற்கை வெளிப்பாடு: 8.2.1 |
|---|
| 2007ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணனிக் குற்றங்கள் சட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் கீழ்வருமாறு:<br>• கணனிக் குற்றங்களை இனங்காணுதல்<br>• அத்தகைய குற்றங்களை விசாரணை செய்ய விதிமுறைகளை வழங்குவதற்கு<br>• அத்தகைய குற்றங்களை தடுப்பதற்கு. |

**(2 x 5= மொத்தம் 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பிரிவு 3

**விடை 03**

(a)

| **கற்கை வெளிப்பாடு: 2.2.2** |
|---|

தரப்பட்ட வினாவில் உண்டியல்மீது புறக்குறிப்பு இடுதலில் சிறினிமலின் (S) பக்கத்தில் கவனவீனம் எதுவும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து S புறக்குறிப்பு இடுதலில் தான் மொத்தத்தில் வேறுபட்ட தன்மையான ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக்கொள்வதாக நேர்மையான தவறான நம்பிக்கையில் உண்டியல் தொடர்பான் ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டமை தெளிவாகும். (அதாவது, உண்டியல் தொடர்பான ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக்கொள்வதில் S இன் தரப்பில் உண்மையான சம்மதம் (மனமொத்த சம்மதம்) இருக்கவில்லை.

எனவே, ஒப்பந்தத்தின் தன்மையிலேயே தவறு உள்ளது.

அத்தகைய தவறின்கீழ் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் செல்லுபடியற்றதாவதுடன் (void) ஒப்பந்தத் தரப்பினரை கட்டுப்படுத்தமாட்டா.

அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் செல்லுபடியற்றதாவதால், ஒப்பந்தத் தரப்பினர் எவ்வித பொறுப்பினையும் கொண்டிருக்கமாட்டார்.

இதனை ஒத்த சம்பவம் ***Foster v Mackinnon (1869) L.R.4 .P.*** **704** எனும் வழக்கில் ஆராயப்பட்டுள்ளது. அந்த வழக்கில் கண்பார்வை நன்றாக இல்லாத ஒரு முதியவர் உத்தரவாத ஒப்பந்தம் என எண்ணி மாற்று உண்டியலொன்றில் புறக்குறிப்பு இடுகின்றார். இங்கு அந்த புறக்குறிப்பினை இடுதலில் முதியவர் கவனவீனமாக செயற்படவில்லை என தீர்மானிக்கப்பட்டது.

***தீர்ப்பு :*** புறக்குறிப்பிடுதலில் மக்கினன் கவனவீனமாக செயற்படவில்லை ஆதலினால், அந்த ஒப்பந்தம் அவரை கட்டுப்படுத்தாததுடன், செல்வுபடியற்றதாகும்.

மேற்படி உண்மைகளை கவனத்திற் கொள்ளும்போது, உண்டியலுக்கான ஒப்பந்தம் S இனை கட்டுப்படுத்தாததுடன், அவர் புறக்குறிப்பிட்ட உண்டியலுக்கு பொறுப்பு அற்றவராவார்.

(b)

| **கற்கை வெளிப்பாடு: 2.5.1** |
|---|

இடைக்காலத் தடையுத்தரவு (injunction) என்பது ஒரு ஒப்பந்தத்தின்கீழ் கடப்பாடுகளை மீறுவதிலிருந்து ஒரு தரப்பினரை தடைசெய்து நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்படும் கட்டளையாகும்.

நீதிமன்றத்தின் விருப்பின் பேரில் இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றினை வழங்குதல் ஒரு நியாயமான நிவாரணமாகும்.

கீழ்வரும் வழக்கில் இதனை ஒத்த உண்மைகள் ஆராயப்பட்டுள்ளன:

வழக்கின் பெயர் :

***Warner Brothers Pictures v Ingolia (1956) NSWR 988***

வழக்கின் உண்மைகள் :

அமெரிக்காவின் வார்னர் பிறதர்ஸ் பிக்சர்ஸில் (Warner Brothers Pictures) பாடுவதற்கு இன்கோலியா இணங்கியிருந்தார். ஆனால் பின்னர் தமது ஒப்பந்தத்திற்கு எதிராக வாதிட்டுவிட்டு அவுஸ்திரேலியா சென்று அங்கு ஒரு கலையரங்கில் அவர் பாட ஆரம்பித்தார். வார்னர் பிறதர்ஸ் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அவர் அவுஸ்திரேலியாவில் பாடுவதனை தடைசெய்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவினை கோரியது.

தீர்ப்பு: அவர் வார்னர் பிறதர்ஸ் உடனான ஒப்பந்தத்தினை மீறியுள்ளதனால் இடைக்கால தடையுத்தரவினை நீதிமன்றம் வழங்கியது.

எனவே, மேற்படி தீர்ப்பினை கவனத்திற் கொள்ளும்போது, லங்கா லிற்றறறி சொசையட்டியுடனான தமது ஒப்பந்தத்தினை சுகி மீறியுள்ளமையால் தரப்பட்டுள்ள தருநிலையில் நீதிமன்றம் தடையுத்தரவு வழங்குவதற்கான சாத்தியம் அதிகமாகும

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**விடை 04**

(a)

| **கற்கை வெளிப்பாடு: 3.3.1** |
|---|

இது தவணைமுறை வினியோகத்திற்கான பொருட்கள் விற்பனை ஒப்பந்தமாகும்.

தரப்பட்ட சந்தர்ப்பத்தில் இதனை ஒத்த சம்பவம் கீழ்வரும் வழக்கில் ஆராயப்பட்டுள்ளது:

வழக்கின் பெயர் :
***Robert A. Munro and Co. vs Meyer (1930) 2 K.B. 312.***

வழக்கு விபரங்கள்:

A என்பவர் ஒரு குறித்த தரத்திலான இறைச்சி மற்றும் எலும்பு உணவின் 1,500 தொன்களை B க்கு விற்கின்றார். இந்தப் பொருட்கள் மாதமொன்றிற்கு 125 தொன்கள் எனும் அடிப்படையில் அனுப்பப்படல் வேண்டும்.

கிட்டத்தட்ட அரைவாசிப் பொருட்கள் அனுப்பப்பட்டு அதற்கான பணம் செலுத்தப்பட்ட பின்னர் அந்தப் பொருட்கள் குறிப்பிட்ட தரத்தினை கொண்டிராமையை கண்டுபிடித்த B, மேலும் வினியோகத்தினை பெறுவதற்கு மறுத்தார்.

தீர்ப்பு: ஒப்பந்த தரத்திற்கு அமைய இல்லாத பொருட்களை மேலும் திணிக்கும் இடரினை ஏற்கவேண்டிய தேவை இல்லாததனால் B க்கு எதிர்கால விநியோகங்களை நிராகரிக்கும் உரிமை உள்ளது.

தரப்பட்டுள்ள தருநிலையில், A இணங்கப்பட்ட தரத்திற்கு அமைவாக பொருட்களை வழங்காத காரணத்தினால் ஒப்பந்தத்தினை மீறியுள்ளார்.

அத்துடன் எதிர்கால விநியோகமான 500 தொன்களும் முதலாம் மற்றும் இரண்டாம் தவணை விநியோகங்களை போன்றே அதே தரத்திலானவையாக இருப்பதற்கான சாத்தியம் மிகவும் அதிகமாகும்..

அதன் விளைவாக மொத்த ஒப்பந்தத்தை நிராகரிக்கும் உரிமையை B கொண்டுள்ளது.
எனவே, ஒப்பந்த தரநிர்ணயங்களுக்கு அமைவாக இல்லாத பொருட்களை மேலும் வினியோகிப்பதன் மூலம் திணிக்கப்படும் இடரினை தவிர்க்கும் பொருட்டு, எதிர்கால வினியோகங்களை நிராகரிப்பதற்கு பிந்து உரித்துடையவராவர்.

அல்லது B கோதுமையின் எதிர்காலத் தவணைக் வினியோகங்களை ஏற்றுக்கொண்டு, வேறுபட்ட தரத்திலான கோதுமையை வினியோகத்ததன்மூலம் ஒப்பந்தத்தினை முறிவு செய்ததற்காக A யிடமிருந்து நட்டஈட்டினை கோரமுடியும்.

(b)

| **கற்கை வெளிப்பாடு: 5.7.5** |
|---|

தரப்பட்டுள்ள தருநிலை ஆய்வில் C தமது பங்காளரான M க்குத் தெரியாது தமது சொந்தப் பொருட்களை சந்தை விலையில் பங்குடமைக்கு விற்றுள்ளார். C ஆனவர் M தொடர்பில் கீழ்வரும் கடமைகளை கொண்டிருக்கவேண்டுமென சட்டம் C மீது கடப்பாடுகளை விதித்துள்ளது.

- பங்குடடையை பாதிக்கும் எந்தவொரு விடயம் தொடர்பிலும உண்மையான கணக்கையும் முழுத் தகவல்களையும் பங்குடமைக்கு வழங்குதல் வேண்டும்.

- இந்த ஊடுசெயலிலிருந்து M இன் சம்மதமின்றி C அடைந்த பயன்கள்பற்றி நிறுவனத்திற்கு கணக்குக் காட்டுதல்

- நிறுவனத்துடனான ஊடுசெயல்களிலிருந்து C இரகசிய இலாபம் எதனையும் பெற்றிருந்தால், அதனை வெளிக்காட்டி, அந்த இலாபத்தினை நிறுவனத்தின் கணக்கில் வைத்தல்.

வழக்கு இல 01

வழக்கின் பெயர் :
***Bentley v Craven (1853) 18 Beav.75***

வழக்கு விபரங்கள் :
பென்றலியும் (B) க்ரவனும் (C) பங்காளர்கள் ஆவர். நிறுவனத்திற்கு சீனியை கொள்வனவு செய்வதற்கு C நியமிக்கப்பட்டார். C தமது சொந்தப் பொருட்களை சந்தை விலையில் நிறுவனத்திற்கு விற்று இலாபம் உழைத்தார். இதுபற்றி B க்கு அறிவிக்கப்படவில்லை.

தீர்ப்பு : இந்த ஊடுசெயலின்மூலம் அடைந்த இலாபத்தினை C, நிறுவனத்தின் கணக்கிற் கொள்ளுதல் வேண்டும்.

வழக்கு இல 02.

வழக்கின் பெயர்:
***Pathirana v Pathirana (1967) 1 AC 233***

வழக்கின் விபரம்
பத்திரன (P1) மற்றும் பத்திரன (P2) ஆகியோர் வாகன சேவைத் தலத்தின் இரு பங்காளர்கள் ஆவர். இந்த சேவைத் தலம் கால்ரெக்ஸ் (Caltex) கம்பனிக்கு சொந்தமானது. அந்தக் கம்பனியானது பங்குடமையை அதன் முகவராக நியமித்திருந்தது. P2 பங்குடமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு 3 மாத முன்னறிவித்தலை P1 க்கு வழங்கியிருந்தார். அத்துடன் P2 ஆனவர் P1 க்கு தெரிவிக்காமல் முகவராண்மையை P2 வின் பெயருக்கு மாத்திரம் பெறுவதற்கு கம்பனியுடன் புதிய உடன்படிக்கை ஒன்றினை செய்துகொண்டு, தற்போது கலைக்கப்பட்டுள்ள பங்குடமையின் வளாகத்திலேயே முன்னர் மேற்கொண்ட அதே வழியிலேயே வியாபாரத்தினை மேற்கொண்டார்

தீர்ப்பு:

முகவராண்மை பங்குடமையின் சொத்து ஆதலினால், P2 இந்த முகவராண்மையினால் அடைந்த இலாபத்தை P1 உடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென பிரிவி கவுன்சில் (Privy Council) தீர்ப்பளித்தது.

மேற்படி வழக்கின் தீர்ப்பின் தத்துவங்களை, தரப்பட்டுள்ள தருநிலைக்கு பிரயோகிக்கும்போது, மேற்படி தத்துவங்கள் சகலவற்றையும் C மீறியுள்ளமை புலனாகும். மேற்படி வழக்கில் குறிப்பிட்டவாறு, C க்கான வெளிப்படையான நிவாரணம் குறிப்பிட்ட இலாபத்தினை வெளிக்காட்டி, அதனை நிறுவனத்தின் இலாபமாக கணக்கிற் கொள்வதாகும்.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.